**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.1408/2022**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : குப்பணகவுண்டர் | கணவர் பெயர் | : பழனிவேல் |
| கிராமம் | : கொல்லப்பட்டி | வயது | : சுமார் 63 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 18.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கினை என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சொத்து பிரச்சனை என்பதால் வழக்கு போட்டுள்ளேன். சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? ஆமாம். குப்பணகவுண்டர் என்பவருக்கு மொத்தம் என்ன என்ன சர்வே எண்களில் சொத்து உள்ளது என்றால் ? சர்வே எண்கள் எனக்கு தெரியாது. நான்கு இடங்களில் சொத்து உள்ளது. சர்வே எண்.251/1, 251/2, 157/1, 154/6 ஆகிய நான்கு சர்வே எண்களில் சொத்துக்கள் உள்ளது என்றால் ? ஆமாம். மேலே சொல்லியுள்ள சர்வே எண்களில் நாளது வரை எந்தவொரு பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை என்றால் ? சரியல்ல. பாகப்பிரிவினை நடைபெற்றுள்ளது. எனது தாயார், எனது சகோதரிகள் மூன்று பேர், இறந்துபோன சகோதரியின் கணவர் ஆகியோர்கள் சேர்ந்து வாய்க்கரலாக பாகம் பிரித்து கொண்டோம். வாய்க்கரலாக பாகம் பிரித்து கொண்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் எங்கு வைத்து பாகம் பிரித்து கொண்டோம் என்றால் ? வீட்டில் தான் நாங்கள் ஐந்து பேரும் பேசி பாகம் பிரித்து கொண்டோம். எனது தகப்பனார் இறந்து

3 ஆண்டுகள் கழித்து வாய்க்கரலாக பிரித்து கொண்டோம். நான் சொல்லியுள்ளதுபோல் சொத்தில் வாய்க்கரலாக பாகம் எதுவும் நடக்கவில்லை என்றால் ? சரியல்ல. எனது தாயார் தான் பேசி முடித்து சொத்து எவ்வாறு அப்பா எழுதி வைத்தாரோ அதன் படி பேசி முடித்து பாகம் பிரிக்கப்பட்டது. எனது தாயார் பெயர் சடையம்மாள் என்றால் ? சரிதான். அவர் உயிருடன் உள்ளாரா என்றால் ? இறந்து சுமார் 7, 8 ஆண்டுகள் ஆகிறது. சடையம்மாள் என்பவரை யார் பராமரித்து வந்தார்கள் என்றால் ? நான் தான் பராமரித்து வந்தேன். நான் சொல்வது பொய் என்றாலும், ஐந்து நபர்களும் சேர்ந்து தான் பராமரித்து வந்தோம் என்றால் ? சரியல்ல. மற்றவர்கள் தொலைவில் உள்ளார்கள். அதனால் நான் தான் பராமரித்து வந்தேன். எனது தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் ? வருடம் எனக்கு தெரியாது. இறந்து 15 வருடங்களுக்கு மேல் இருக்கும். தாவா 1வது இலக்க சொத்தில் உள்ள கிணற்றினை எப்போது மூடப்பட்டது என்றால் ? எனது தாயார் இருக்கும் போதே கிணறு மூடப்பட்டுவிட்டது. கிணறு மூடப்பட்டபோது எனது தகப்பனார் உயிருடன் இருந்தாரா என்றால் ? இல்லை. கிணற்றினை ஐந்து நபர்களும் சேர்ந்து தான் மூடினோம் என்றால் ? இல்லை. கிணற்றை மூடியதாக சொல்லியுள்ள நிலையில் எவ்வளவு மண், எவ்வளவு ஜல்லி போட்டு கிணற்றை மூடினோம் என்றாலும், அதற்கான செலவுகளை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் பிராதில் கிணற்றை மூடுவதற்கு ஏற்பட்ட செலவுகளை சொல்லாத நிலையில், மற்றவர்களும் சேர்ந்து தான் கிணற்றை மூடியதால் தான் என்னால் குறிப்பிட்டு கிணற்றை மூடியதற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது என்பது குறித்து நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்தில் நான் கட்டியுள்ளதாக சொல்லியுள்ள வீடானது அரசு நிதி உதவியுடன் கட்டிய வீடு என்றால் ? எனது கணவரின் பெயரில் கலைஞர் ஆட்சியில் கொடுத்த வீடு ஆகும். அரசாங்கத்தின் செலவில் வீடு கட்டிக்கொண்டார்கள் என்றாலும்,

குப்பணகவுண்டரின் வாரிசுகளும் வேலை செய்து தான் அந்த வீடானது கட்டப்பட்டது என்றால் ? சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பினை சிப்டிங் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது பொய் என்றாலும், ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் செய்ததாக வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. எனது கணவர் பழனிவேல் என்பவருக்கு வேறு இடத்தில் வீடு இருந்தது என்றால் ? ஆமாம். கூரை வீடு இருந்தது. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள மின்சார ரசீதானது எனது கணவரின் வேறு கூரை வீட்டிற்கு பாத்தியப்பட்ட ரசீதினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. வேறு எந்த மின் இணைப்பும் இல்லை. தாவா 1வது இலக்க சொத்தில் தொகை ரூ.2,00,000த்திற்கு மேல் செலவு செய்து செம்மண் ஓட்டி விவசாயத்திற்கு ஏற்ற பூமியாக மாற்றியுள்ளேன் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான ரசீதுகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? ரசீது தாக்கல் செய்யவில்லை. நான் செம்மண் எதுவும் பூமியில் கொட்டவில்லை என்றாலும், குப்பணகவுண்டர் இருந்த காலத்தில் சொத்துக்கள் எவ்வாறு இருந்ததோ அதே போல் தான் தற்போதும் உள்ளது என்றால் ? சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்தில் பருத்தி, தென்னை பயிருட்டு அனுபவித்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் வருவாய்துறை ஆவணங்களான சாகுபடி அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா 1வது இலக்க சொத்தை குப்பணகவுண்டரின் வாரிசுகள் கூட்டாக அனுபவித்து வருவதால் தான் என்னால் தனிப்பட்ட முறையில் அனுபவித்திறக்கான வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் ? சரியல்ல. சர்வே எண்.154/6ல் 2ம் பிரதிவாதி கருப்பாத்தாள், 3-ம் பிரதிவாதியாகிய வளர்மதி ஆகிய இருவரும் 2/5 பாக சொத்தினை கருப்புச்சாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள்

என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்குரைஞர் சொல்லிய போது 2, 3 பிரதிவாதிகள் சொத்தினை கிரையம் செய்து கொடுத்த விபரம் பற்றி நான் தெரிந்து கொண்டேன் என்றால் ? தெரிந்து கொண்டேன். 2, 3 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்த சொத்திற்க்கான கிரைய ஆவணங்களை பற்றி எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் ? சரியல்ல.

தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.18 11:16:56 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்